# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2408/14 - 2024 නොවැම්බර් මස 01 වැනි සිකුරාදා - 2024.11.01

*2408/14 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, பிரதேச சபைகள் சட்டம்***

கட்டளை

*262 ஆம் அத்தியாயமான உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 66ஆ ஆம் பிரிவின் (4) ஆவது உப பிரிவின் பிரகாரம் 2024, மாச்சு மாதம் 01 ஆந் திகதியிடப்பட்ட 2373/51 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை ஊடாக கலைக்கப்பட்ட பிரதேச சபையாகக் கருதப்படுகின்ற எல்பிட்டிய பிரதேச சபை 1987 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவினூடாகவும், 4 ஆம் மற்றும் 6 ஆம் பிரிவுகளூடாகவும் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கமைய பிரதம அமைச்சர் நீதி, பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் தொழில் அமைச்சர் ஹரினி அமரசூரிய ஆகிய நான் இந்தக் கட்டளை ஊடாக;*

*(1) 1987, மே மாதம் 12 ஆந் திகதியிடப்பட்ட 453/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையின் I ஆம் பகுதியில் குறித்துரைக்கப்பட்டுள்ள பிரதேசம் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் அலுவல்களுக்காக பிரதேச சபையொன்றாக இருத்தல் வேண்டுமென பிரகடனப்படுத்துகின்றேன்.*

*(2) அந்த அட்டவணையின் II ஆம் பகுதியில் குறப்பிடப்பட்டுள்ள எல்லைகள், அந்தப் பிரதேச சபையின் நிர்வாக எல்லைகள் என நிர்ணயிக்கின்றேன்.*

*(3) அந்தக் கட்டளையின் (1) ஆம் பந்தியின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பிரதேச சபை பிரதேசத்திற்காக பிரதேச சபையொன்றைக் கூட்டிணைத்து, அந்தப் பிரதேச சபைக்கு கீழ்க்குறிப்பிடப்படும் பெயரை ஒதுக்குகின்றேன்.*

***"எல்பிட்டிய பிரதேச சபை"***


1A - G 42991 — 05 (2024/11)

*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(4) எல்பிட்டிய பிரதேச சபை கீழ்க்குறிப்பிடப்படும் i, ii, iii ஆம் பந்திகளின் பிரகாரம் தெரிவுசெய்யப்படுகின்ற மற்றும் தெரிந்தனுப்பப்படுகின்ற உறுப்பினர்களைக் கொண்டுள்ளதாக இருத்தல் வேண்டுமென கட்டளையிடுகின்றேன் :

(i) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் (அ) பந்தியின் பிரகாரம் தெரிவுசெய்யப்பட வேண்டிய உறுப்பினர்கள் பதினேழு பேரையும்,

(ii) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் (ஆ) பந்தியின் பிரகாரம் தெரிந்தனுப்பப்பட வேண்டிய உறுப்பினர்கள் பதினொரு பேரையும், மற்றும்

(iii) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் (இ) பந்தியின் பிரகாரம், 262 ஆம் அத்தியாயமான உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65ஆ ஆம் பிரிவின் (4) ஆம் உப பிரிவின் (அ) பந்தியின் கீழ் தேர்தல்கள் ஆணையாளரால் தீர்மானிக்கப்படுகின்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(5) எல்பிட்டிய பிரதேச சபையின் பதவிக் காலம் 2024, நவெம்பர் மாதம் 05 ஆந் திகதி முதல் ஆரம்பித்தல் வேண்டும்.

**கலாநிதி ஹரினி அமரசூரிய**,
பிரதம அமைச்சர்,
நீதி, பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும்
தொழில் அமைச்சர்.

கொழும்பு,
2024, நவெம்பர் 01.

EOG 11-0002

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.